செ.வெ.எண். 70

நாள். 30.12.2017

# பத்திரிக்கை செய்தி

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் பொது இடங்கள் மற்றும் தனியாருக்கு பாத்தியப்பட்ட இடங்களில் டிஜிட்டல் பேனர்கள், விளம்பர பலகை அமைக்க தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (டிஜிட்டல் பேனர் மற்றும் பிளேகார்டுகள் வைக்க அனுமதி) விதிகள் 2011-ன்படி அதற்குரிய கட்டணங்களை செலுத்தி உரிய படிவத்தில் மாவட்ட நிர்வாகத்திடம் விண்ணப்பித்து முறையான அனுமதி பெற்ற பின்னரே வைக்க வேண்டும். அனுமதி வழங்க கோரும் விண்ணப்பத்துடன் டிஜிட்டல் பேனர் அமைய உள்ள இடம் தனியார் இடம் எனில் நில உரிமையாளரிடமிருந்தும், நெடுஞ்சாலை துறை இடம் எனில் உதவி கோட்டப் பொறியாளர் நிலைக்கு குறையாத அலுவலர் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான இடம் எனில் சம்பந்தப்பட்ட ஆணையர்/ செயல்அலுவலர்களிடமிருந்தும், தடையின்மைச் சான்று பெற்றும், போக்குவரத்திற்கும், பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்வதற்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்பதற்கு அந்தந்த பகுதி காவல் ஆய்வாளர் நிலைக்கு குறையாத அலுவலரிடமிருந்து ஆட்சேபனையின்மை சான்று பெற்றும் பேனர் அமைக்கப்பட உள்ள இடங்களின் வரைபடத்துடன்(TOPO Sketch) விண்ணப்பிக்க வேண்டும்.

பேனர் 1-க்கு மாநகராட்சி பகுதிக்கு ரூ.200/-ம் நகராட்சி பகுதிக்கு ரூ.100/-ம் பேரூராட்சி பகுதிக்கு ரூ.50/-ம் கட்டணமாக செலுத்த வேண்டும். பேனர் நிறுவும் போதோ அல்லது அகற்றும் போதோ சாலைகள் மற்றும் பொது சொத்துக்கு சேதம் ஏற்படும் என்பதை கருத்தில் கொண்டு பேனர் 1-க்கு ரூ.50/- மட்டும் முன் வைப்புத்தொகையாக செலுத்த வேண்டும்.

பேனர் நிறுவுதல் மற்றும் அகற்றுதல் தேதி உட்பட 6 நாட்களுக்கு மட்டுமே பேனர் வைக்க அனுமதி வழங்கப்படும். சாலையின் குறுக்கே மற்றும் கல்வி நிலையங்கள், வழிபாட்டுதலங்கள், மருத்துவமனை, சாலைமுனைகள், தெரு சந்திப்புகள், நினைவுச் சின்னங்கள், சிலைகள் முன்பாகவும் பேனர் வைக்க அனுமதி வழங்கப்படமாட்டாது. அனுமதி பெறாமல் வைக்கப்படும் பேனர்கள், ஆபாசமான / ஆட்சேபகரமான கருத்துகள் கொண்ட பேனர்கள் உடன் அகற்றப்படுவதோடு அதற்கான செலவினத்தொகை மனுதாரர்களிடமிருந்து வசூல் செய்யப்படும். மேலும் சட்டப்படியான நடவடிக்கையும் எடுக்கப்படும். பேனரின் அடிப்பக்கத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி ஆணை எண் விபரம், அனுமதிக் காலம், அனுமதிக்கப்பட்ட மொத்த பேனர் எண்ணிக்கை போன்ற விபரங்கள் 1 இன்ச் அளவிற்கு குறையாது பிரிண்ட் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி பெறப்படாமல் பேனர் நிறுவப்பட்டால் 1 வருடம் சிறைத் தண்டனை அல்லது ரூபாய்.5,000/-அபராதம் அல்லது இரண்டும் சேர்த்தோ தண்டனையாக வழங்கப்படும்.

மாவட்ட ஆட்சியர்,
திருநெல்வேலி.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி